Australian Government
Department of Human Services

# நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே பயணம் செய்கிறீர்களா?

## ஆஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும் வேளையில் கொடுப்பனவுகளைப் பெறுதல்

நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும் வேளையில் உங்கள் கொடுப்பனவுகளை அல்லது சலுகை அட்டையைப் பெறுவதற்கு, நீங்கள் ஒவ்வொரு கொடுப்பனவு அல்லது சலுகை அட்டைக்கான தகுதித் தேவைப்பாடுகளையும் தொடர்ந்து பூர்த்திசெய்ய வேண்டியது கட்டாயமாகும்.

உங்களுடைய கொடுப்பனவுகள் அல்லது சலுகை அட்டையின் அடிப்படையில், ஆஸ்திரேலியாவிற்கு வெளியே பயணம் செய்வதால் உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வெவ்வேறு விதிமுறைகள் உள்ளன. நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்படும் போது, உங்களுடைய கொடுப்பனவுகள் அல்லது சலுகை அட்டைகள் மாறக்கூடும் அல்லது இந்த விதிமுறைகளில் அடிப்படையில் நிறுத்தப்படவும் கூடும். நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில், கொடுப்பனவுகள் மற்றும் சலுகை அட்டைகள் குறித்த நாளது வரையிலான தகவல்களை அறிவதற்கு, humanservices.gov.au/paymentsoverseas என்ற இணையப்பக்கத்தைப் பார்க்கவும்

நீங்கள் பயணம் செய்வதற்கு முன்னர் இந்த இணையத்தளத்தில் சரிபாருங்கள் அல்லது உங்களுடைய குறிப்பிட்ட சூழ்நிலைகள் குறித்து யாரிடமேனும் உங்கள் மொழியில் பேசுவதற்கு 131 201 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்.

## உங்கள் சூழ்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து எங்களிடம் கூறுங்கள்

உங்கள் கொடுப்பனவுகள் அல்லது சலுகை அட்டையை வழக்கமாக பாதிக்கக்கூடிய உங்களின் எவையேனும் சூழ்நிலை மாற்றங்கள் குறித்து நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்திருந்தால் எப்படி தெரிவிப்பிர்களோ அவ்வாறே நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையிலும் எங்களிடம் தெரிவிக்க வேண்டியது முக்கியமாகும். உதாரணமாக, உங்களின் உறவுமுறை நிலைமையில் மாற்றங்கள் இருந்தால், நீங்கள் அதுகுறித்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

### உங்கள் பயணத்தைப் பற்றி எங்களிடம் எவ்வாறு தெரிவிப்பது

myGov வாயிலாக உங்கள் Centrelink இணையக் கணக்கைப் பயன்படுத்தி, உங்கள் பயணத் திட்டங்களைப் பற்றி எங்களிடம் எளிதாகத் தகவல் தெரிவிக்கலாம். உங்கள் வெளிநாட்டுப்

பயண விவரங்களை நீங்கள் எந்த நேரத்திலும் இணையத்தில் சேர்க்கலாம், பார்க்கலாம், புதுப்பிக்கலாம் மற்றும் அகற்றலாம்.

நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் myGov வாயிலாக ஒரு Centrelink இணையக் கணக்குக்காகப் பதிவுசெய்துகொள்ளவும். இதன்மூலம், உங்கள் பயணத் திட்டங்கள் குறித்து நீங்கள் எங்களிடம் எளிதாகத் தகவல் தெரிவிக்க முடியும். மேலும், நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில் உங்கள் கடிதங்களையும் பிற சேவைகளையும் இணையம்வழி அணுக முடியும்.

நீங்கள் எப்போது ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்படுகிறீர்கள் என்பதை ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் துறையும் கூட எங்களுக்குத் தகவல் தெரிவிக்கும்.

உங்களிடம் தற்சமயம் ஒரு myGov கணக்கு இல்லையெனில், **my.gov.au** -இல் ஒரு myGov கணக்கை உருவாக்கி, Centrelink -ஐ உங்கள் myGov கணக்குடன் இணைத்திடுங்கள். இதைச் செய்வதற்கு, ‘Services' என்ற தேர்வைத் தேர்ந்தெடுத்து, அதன்பிறகு Centrelink -க்கு அடுத்துள்ள link ஐகானைச் சொடுக்குங்கள். உங்களுடைய myGov கணக்குடன் நாங்கள் சரியான பதிவேட்டை இணைப்பதற்கு, நீங்கள் சில கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கலாம்.

நீங்கள் உங்களுடைய கைப்பேசி எண்ணை myGov உடன் பதிவுசெய்துகொள்ளத் தேர்ந்தெடுத்தால், நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில் இந்த எண்ணிலிருந்து உங்களால் செய்திகளைப் பெற முடியுமா என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.

## ஆஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும் வேளையில் Medicare -ஐ அணுகுதல்

நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில் உங்களால் Medicare -ஐ அணுக இயலாது. நீங்கள் சுகவீனம் அடைந்தால், உங்களின் எல்லா மருத்துவச் சிகிச்சைக்கும் நீங்கள் தான் செலவு செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் பயணம் செய்கின்ற நாட்டில் ஒரு Reciprocal Health Care Agreement நடைமுறையில் இருந்தால், நீங்கள் சிலவற்றுக்குப் பணம் செலுத்த வேண்டியிருக்காது. சில நாடுகளில் பயணம் செய்யும் ஆஸ்திரேலியக் குடியிருப்பாளர்களின் அத்தியாவசிய மருத்துவச் சிகிச்சைச் செலவிற்கு இத்தகைய ஒப்பந்தங்கள் காப்புறுதி அளிக்கின்றன. ஆனால் இவை வெளிநாட்டுப் பயணத்திற்கான தனிப்பட்ட பயண உடல்நலக் காப்பீட்டிற்கு மாற்றாக இருப்பதற்கு வடிவமைக்கப்படவில்லை.

நீங்கள் ஒரு ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள ஒரு நாட்டிற்குச் செல்கிறீர்கள் எனில், உங்களைய நடப்பு Medicare அட்டையை உங்களுடன் எடுத்துச் செல்லவும். உங்களுக்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்பட்டால், இது அதற்கான செயல்முறையை எளிதாக்கலாம்.

நீங்கள் பயணம் செய்கின்ற நாட்டுடன் ஆஸ்திரேலியா ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றதா என்பது உள்பட, Reciprocal Health Care Agreements குறித்த மேலதிகத் தகவல்களுக்கு, humanservices.gov.au/rhca என்ற இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்

## உங்களுடைய மருந்துகளை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லுதல் அல்லது அனுப்பி வைத்தல்

Pharmaceutical Benefits Scheme மருந்துகளை உங்களுடைய தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அல்லது உங்களுடன் பயணம் செய்கின்ற ஒருவரின் பயன்பாட்டிற்காக ஆஸ்திரேலியாவிற்கு வெளியே எடுத்துச் செல்வது அல்லது அனுப்பி வைப்பது சட்டவிரோதமாகும்.

நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் வேளையில், Medicare உள்பட, எங்களுடைய கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் குறித்தப் புதிய தகவல்களை நீங்கள் **humanservices.gov.au/paymentsoverseas** என்ற இணையப்பக்கத்தில் கண்டறியலாம்

நீங்கள் பயணம் செய்வதற்கு முன்னர் இந்த இணையத்தளத்தில் சரிபாருங்கள் அல்லது Medicare குறித்தும், வெளிநாட்டிற்கு மருந்துகளை எடுத்துச் செல்வது குறித்தும் எங்களுடன் உங்கள் மொழியில் பேசுவதற்கு **131 450** (TIS National) என்ற எண்ணில் அழைக்கவும்.

## மேலும் அதிக விவரங்களுக்கு:

- **humanservices.gov.au/yourlanguage** என்ற இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள். இதில் தமிழில் உள்ள தகவல்களை நீங்கள் வாசிக்கலாம், கேட்கலாம் அல்லது காணொளிகளைக் காணலாம்.
- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியில் எங்களுடன் பேசுவதற்கு **131 202** என்ற எண்ணில் அழைக்கவும்.
- Medicare மற்றும் Child Support கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் மொழியில் எங்களுடன் பேசுவதற்கு **131 450** (TIS National) என்ற எண்ணில் அழைக்கவும்.
- ஒரு சேவை நிலையத்தைப் பார்வையிடுங்கள்

குறிப்பு: உங்கள் இல்லத் தொலைபேசியில் இருந்து ஆஸ்திரேலியாவில் எந்த இடத்திலும் இருக்கும் ஒரு 13 எண்ணிற்கு மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு உள்ளூர் அழைப்புக் கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. தொலைபேசிச் சேவை வழங்குநரைப் பொறுத்து இக்கட்டணங்கள் மாறுபடலாம். மேலும், கைப்பேசி அழைப்புகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

## பொறுப்புத் துறப்பு

இந்தத் தகவல் தாளில் உள்ள தகவல்கள் ஏப்ரல் 2016 நிலவரப்படி துல்லியமானவை.

Australian Government
Department of Human Services

# Are you travelling outside Australia?

## Payments while outside Australia

To get your payments or concession card while outside Australia, you must continue to meet the eligibility requirements for each payment or concession card.

Depending on your payments or concession card, there are different rules on how travelling outside Australia may affect you. When you leave Australia, your payments or concession cards may change or even stop based on these rules. For the most up-to-date information about payments and concession cards while you are overseas visit **humanservices.gov.au/paymentsoverseas**

Check the website before you travel or call us on **131 202** to speak to someone in your language about your specific circumstances.

## Tell us about changes to your circumstances

It is important that you advise us of any change to your circumstances that would normally affect your payments or concession card while you are overseas, as you would if you were in Australia. For example, you need to tell us if there are changes to your relationship status.

## How to tell us about your travel

The easiest way to tell us about your travel plans is to use your Centrelink online account through myGov. You can add, view, update and remove your overseas travel details online at any time.

Register for a Centrelink online account through myGov before you leave Australia so you can easily tell us about your travel plans and access your letters and other services online while you are away.

Australia's immigration department will also advise us when you leave Australia.

If you don't have a myGov account already, create a myGov account at **my.gov.au** and link Centrelink to your myGov account by selecting 'Services' and then the link icon next to Centrelink. You may need to answer some questions so we link the correct record to your myGov account.

If you choose to register your mobile number with myGov, make sure you can receive messages from this number while overseas.

## Accessing Medicare while outside Australia

You will not be able to access Medicare services while overseas. If you get sick, you may have to pay for all your medical treatment. If there is a Reciprocal Health Care Agreement in place with the country you're going to, you might not have to pay for some things. These agreements cover the cost of essential medical treatment for Australian residents travelling in some countries, and are not designed to replace private travel health insurance for overseas travel.

If you are going to a country with an agreement, take your current Medicare card with you. Then, if you need medical treatment, it can make the process easier.

For more information about Reciprocal Health Care Agreements, including if Australia has one with the country you are travelling to, visit **humanservices.gov.au/rhca**

## Taking or sending your medicines overseas

It is illegal to take or send Pharmaceutical Benefits Scheme medicines out of Australia that are not either for your personal use or the use of someone travelling with you.

You will find the most up-to-date information about our payments and services while overseas, including Medicare, on **humanservices.gov.au/australiansoverseas**

Check the website before you travel or call **131 450** (TIS National) to speak to us in your language about Medicare and taking medicines overseas.

## For more information:

- go to **humanservices.gov.au/yourlanguage** where you can read about, listen to or watch videos with information in your language
- call **131 202** to speak to us in your language about Centrelink payments and services
- call **131 450** (TIS National) to speak with us in your language about Medicare and Child Support payments and services
- visit a service centre.

**Note:** call costs from your home phone to a 13 number from anywhere in Australia are the cost of a local call. Charges may vary depending on the telephone service provider, and mobiles may incur a higher charge.

## Disclaimer

Information in this factsheet is accurate as at April 2016.